# அக்டோபர் – 19 – வியாழன்

**“என் விண்ணப்பக் குரலை உம்முடைய செவிகள் கவனத்துடன் கேட்கட்டும்“ தி.பா 130 : 2**

## முதல் வாசகம் : உரோமையர் 3 : 21 – 30

சகோதர சகோதரிகளே! இப்பொழுதோ கடவுள் மனிதரைத் தமக்கு ஏற்புடையவராக்கும் செயலுக்கும் திருச்சட்டத்துக்கும் தொடர்பில்லை என்பது வெளியாக்கப்பட்டுள்ளது திருச்சட்டமும் இறைவாக்குகளும் இதற்குச் சான்று பகர்கின்றன.இயேசு கிறிஸ்துவின்மீது கொள்ளும் நம்பிக்கையின் வழியாகக் கடவுள் மனிதரைத் தமக்கு ஏற்புடையவராக்குகிறார் நம்பிக்கை கொள்வோர் அனைவரையுமே அவர் ஏற்புடையவராக்குகிறார். அவர் வேறுபாடு காட்டுவது இல்லை. ஏனெனில், எல்லாருமே பாவம் செய்து கடவுள் கொடுத்த மேன்மையை இழந்து போயினர். ஆயினும் அனைவரும் கிறிஸ்து இயேசு நிறைவேற்றிய மீட்புச் செயலின் மூலம் கடவுளுடைய அருளால் இலவசமாய் அவருக்கு ஏற்புடையவர்கள் ஆக்கப்படுகின்றனர்.இரத்தம் சிந்தி மனிதருடைய பாவத்துக்குக் கழுவாய் ஆகுமாறு இயேசுவைக் கடவுள் நியமித்தார். அவரிடம் நம்பிக்கை கொள்வோருக்காகவே அவ்வாறு செய்தார். கடவுள் கடந்த காலத்தில் மனிதர் செய்த பாவங்களைக் கண்டுகொள்ளாமல் விட்டு விட்டார். இவ்வாறு மனிதரைத் தமக்கு ஏற்புடையவராக்கும் முறையை அவர் காட்டினார்.இக்காலத்தில் தமது நீதியைக் கடவுள் பொறுமையோடு காட்டி வருகிறார். ஆம், அவர் நீதியுள்ளவர். இயேசுவின்மீது நம்பிக்கை கொள்வோரைத் தமக்கு ஏற்புடையவராக்கி வருகிறார்.அப்படியிருக்க, பெருமை பாராட்ட இடமேது? இடமில்லை. எந்த அடிப்படையில் பெருமைபாராட்ட இடமில்லை? செயல்களின் அடிப்படையிலா? இல்லை நம்பிக்கையின் அடிப்படையில்தான்.ஏனெனில் திருச்சட்டம் சார்ந்த செயல்களால் அல்ல, இயேசுவின்மீது வைக்கும் நம்பிக்கையின் வாயிலாகவே எவரும் கடவுளுக்கு ஏற்புடையவராக முடியும் எனக் கருதுகிறோம். கடவுள் யூதருக்கு மட்டுமா கடவுள்? பிற இனத்தாருக்கும் அவர் கடவுள் அல்லவா? ஆம், பிற இனத்தாருக்கும் அவரே கடவுள்.ஏனெனில் கடவுள் ஒருவரே. விருத்தசேதனம் பெற்றவர்களாயினும் விருத்தசேதனம் பெறாதவர்களாயினும், இயேசுவின்மீது கொள்ளும் நம்பிக்கையின் அடிப்படையில் யாவரையும் கடவுள் தமக்கு ஏற்புடையவராக்குகிறார்.

**பதில்பாடல் :** பேரன்பும் மீட்பும் உடைய ஆண்டவரையே நம்பியிரு

## நற்செய்தி : லூக்கா 11 : 47 - 54

அக்காலத்தில் ,யேசு கூறியதாவது: ”ஐயோ! உங்களுக்குக் கேடு! ஏனெனில் நீங்கள் இறைவாக்கினருக்கு நினைவுச் சின்னங்கள் எழுப்புகிறீர்கள். ஆனால் அவர்களைக் கொலை செய்தவர்கள் உங்கள் மூதாதையர்களே. உங்கள் மூதாதையரின் செயல்களுக்கு நீங்கள் சாட்சிகளாய் இருக்கிறீர்கள் அவற்றுக்கு உடன்பட்டும் இருக்கிறீர்கள். அவர்கள் கொலை செய்தார்கள் நீங்கள் நினைவுச் சின்னம் எழுப்புகிறீர்கள்.இதை முன்னிட்டே கடவுளின் ஞானம் இவ்வாறு கூறுகிறது: நான் அவர்களிடம் இறைவாக்கினரையும் திருத்தூதரையும் அனுப்புவேன். அவர்களுள் சிலரைக் கொலை செய்வார்கள் அவர்களுள் சிலரைத் துன்புறுத்துவார்கள்.ஆபேலின் இரத்தம்முதல் பலிபீடத்திற்கும் தூயகத்திற்கும் நடுவே கொலை செய்யப்பட்ட இறைவாக்கினர் அனைவரின் இரத்தத்திற்காகவும் இந்தத் தலைமுறையினரிடம் கணக்குக் கேட்கப்படும்.ஆம், நான் உங்களுக்குச் சொல்கிறேன், இந்த தலைமுறையினரிடம் கணக்குக் கேட்கப்படும்.”ஐயோ! திருச்சட்ட அறிஞரே, உங்களுக்குக் கேடு! ஏனெனில் அறிவுக் களஞ்சியத்தின் திறவுகோலை நீங்கள் எடுத்துக்கொண்டீர்கள். நீங்களும் நுழைவதில்லை நுழைவோரையும் தடுக்கிறீர்கள்” என்றார்.இயேசு அங்கிருந்து புறப்பட்டபோது மறைநூல் அறிஞரும் பரிசேயரும் பகைமையுணர்வு மிகுந்தவராய்அவரது பேச்சில் அவரைச் சிக்கவைக்குமாறு பல கேள்விகளைக் கேட்டனர்

**தியானம்:** மனித உறவுகள், உணர்வுகள், சிந்தனைகள், செயல்கள் அனைத்தும் மாறினாலும் ஆண்டவர் இயேசு என்றுமே மாறாதவர். அவரது வார்த்தைகளும் என்றுமே மாறதவை. இதனாலேயே எம்மோடு ஆண்டவர் இயேசு தமது வார்த்தைகளின் வழியாகப் பேச விரும்புகின்றார். இறைமகன் இயேசு எம்மை எச்சரித்து, எமதுள்ளத்தில் பயத்தினை உருவாக்க விரும்பவில்லை. மாறாக, பாவநிலையிலிருந்து எம்மைப் புதுப்பித்து, தம்மோடு இணைத்துக்கொள்ளக் காவலிருக்கின்ற, கவலை தோய்ந்த தமது உள்ளத்தை அறியத்தருகின்றார். தமது மீட்பிற்கான திட்டத்தை பல்வேறு வடிவங்களில் அவர் விளக்கிக் கூறவிரும்புகின்றார். இதன் அடிப்படையிலேயே “நான் உங்களுக்குச் சொல்கிறேன், இந்த தலைமுறையினரிடம் கணக்குக் கேட்கப்படும்” (லூக்கா11:51) என்கின்றார். அப்படியாயின் எம்மோடு பேசும் கடவுளுக்கு நாம் தரும் பதில்தான் என்ன? ஆண்டவர் எமக்களித்த வாழ்விற்காக மட்டுமல்ல, இந்த நல்ல நேரம் வரைக்கும் எம்மை உயிரோடு வைத்துப் பாதுகாத்துப் பராமரிப்பதற்காக நாம் கணக்குக் கொடுக்க வேண்டும். “உடன்படிக்கையின் மக்கள்” எனப்படும் நாம் ஆண்டவர் இயேசுவின் எதிர்பார்ப்பிற்குப் பதில் கொடுக்கவேண்டும். எமக்கு வழங்கியுள்ள வசதி வாய்ப்புக்களுக்காக நாம் பதில் சொல்லவேண்டும். ஆதலால், நம்மோடு பேசி, நமது மீட்பிற்காக தமது திட்டத்தை வெளிப்படுத்தி, நம்மைத் தமதண்டை அழைக்கின்ற கடவுளிடம் நம்மை முற்றுமுழுதாக சரணாகதியாக்குவதே நாம் செய்யக்கூடிய ஒரேயொரு செயலாகும். எனவே, எதிர்காலத்தில் நாம் அடைய இருக்கின்ற புதுவாழ்விற்குள் எம்மை முற்றுமுழுதாக அர்ப்பணிப்போம். இறைவனை நோக்கி நாம் மேற்கொள்ளும் ஆன்மீகப் பயணம், இறை பிரசன்னத்திற்குள் எம்மை அழைத்துச் செல்லும். இறைவனை நாம் முகமுகமாகத் தரிசிக்கும் பாக்கியத்தை எமக்குத்தரும். அவரது இணையற்ற அன்பின் வரப்பிரசாதத்தை நாம் சுவைக்கமுடியும். ஆதலால், ஆண்டவர் இயேசு எம்மீது வைத்துள்ள அளவுகடந்த அன்பின் நிமித்தம் சிலுவை மரத்தில் சொல்லொனாக் கொடுமைகளை அனுபவித்தார் என்ற உண்மையை உணர்ந்து மனம்மாறுவோம். எமது மனமாற்றத்தின் அடையாளமாக பாவப்பொறுத்தல் அருட்சாதனத்தைப் பெற்றுக்கொள்வோம். தம்மிடம் மனம் திரும்பி வருகின்ற ஒவ்வொரு ஊதாரிப் பிள்ளையையும் அரவணைக்க வல்லவராக, இருகரம் விரித்தவராக இறை இரக்கத்தின் அரசர் தயாராக உள்ளார். நாம் தயாராக இருக்கின்றோமா?